## DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KANGAYAM**

| | | |
|---|---|---|
| Calender | : | STC.NO. 13/2019 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution D.W. 2<br>Defence |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அய்ய நாடார் | தொழில் | : | கிளை மேலாளர் |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | கருப்பையா | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 16.09.2022.

**சாட்சி அழைப்பாணையின் பேரில் முன்னிலையாகி எதிரி தரப்பில் முதல் விசாரணை**

1. நான் தற்போது தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி, காங்கேயம் கிளையில் கிளை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். அழைப்பாணை வந்ததன் பேரில், நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன். எங்கள் வங்கியில் கணக்கு எண்.407150050800030 ஆனது ஒரு ஸ்ரீபொன் அழகு எக்ஸ்போர்ட்ஸ் என்ற நிறுவனம் பெயரில், நடப்பு கணக்காக துவங்கப்பட்டுள்ளது. கணக்கானது கடந்த 2015ம் வருடம் துவங்கப்பட்டுள்ளது.

2. ஸ்ரீபொன் அழகு எக்ஸ்போர்ட்ஸ் நிறுவனம் கூட்டாண்மை நிறுவனமாகும். அதில் இரண்டு பங்குதாரர்களாக அருண்குமார், கௌசல்யா ஆகியோர் இருக்கிறார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும்

STC.No. 13/2019, நாள். 16.09.2022. D.W. 2. விசாரணை தொடர்ச்சி

ம.சா.ஆ.1 காசோலையானது, எங்கள் வங்கியால் ஸ்ரீபொன் அழகு எக்ஸ்போர்ட்ஸ் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டதாகும். காசோலையை நிறுவனத்தின் பெயரில் மட்டும் தான் பயன்படுத்த முடியும், வேறு தனிநபர் பெயரில் பயன்படுத்த முடியாது என்றால் சரிதான்.

3. மேற்சொன்ன நடப்பு கணக்கு எண் துவங்குவதற்கான விண்ணப்பத்தின் நகல் மற்றும் கேஒய்சி படிவம் மற்றும் அதனுடன் இணைந்த ஆவணங்கள் கொண்டுவந்திருக்கிறேன். **மேற் சொன்ன நடப்பு கணக்கின் கணக்கு துவங்குவதற்கான விண்ணப்பத்தின் உண்மை நகல் எ.த.சா.ஆ.12. கேஒய்சி விண்ணப்பம் மற்றும் அதனுடன் இணைந்த ஆவணங்கள் எ.த.சா.ஆ.13. என்னுடைய அடையாளத்தை காட்டும் அடையாள அட்டையின் நகல் எ.த.சா.ஆ.14.**

4. கடந்த 2017ம் வருடம் முதல் மேற்சொன்ன நடப்பு கணக்கில் பரிவர்த்தனைகள் எதுவும் இன்றி Dormant ஆக இருக்கிறது. ஸ்ரீபொன் அழகு எக்ஸ்போர்ட்ஸ் நிறுவனத்தில் பங்குதாரர்கள் யாரும் விலகி இருக்கிறார்கள் என்பது தொடர்பாக தற்போது வரை, வங்கிக்கு எந்த தகவலும் இல்லை.

**புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. ஸ்ரீபொன் அழகு எக்ஸ்போர்ட்ஸ் நிறுவனத்தின் Authorisized Signotary யார் என்றால் பங்குதாரர்களான அருண்குமார், கௌசல்யா ஆகிய இருவரும் ஆவார்கள். அருண்குமார் பெயரில் வேறு காசோலைகள் எதுவும் பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளதா என்பதை வங்கி கணக்கு பட்டியலை பார்த்து தான் சொல்ல முடியும். பங்குதாரர் ஒப்பந்தம் முறையாக பதிவு செய்யப்படவில்லையென்றால் சரிதான். வங்கி கணக்கு விண்ணப்பம் துவங்க வாடிக்கையாளர் அளித்த, விவரங்களின் படி தான்

STC.No. 13/2019, நாள். 16.09.2022. D.W. 2. விசாரணை தொடர்ச்சி

நான் சாட்சியம் அளிக்கிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் எ.த.சா.ஆ.11 ஆவணம் எங்கள் வங்கியால், வழங்கப்பட்டது தான் ஆகும். அதன்படி, கடந்த 03.04.2017 தேதி முதல் மேற்சொன்ன நடப்பு கணக்கில், ரூ.8602/– Negative Balance ஆக உள்ளது. ஸ்ரீபொன் அழகு எக்ஸ்போர்ட்ஸ் நிறுவனம் பங்குநிறுவன சட்டப்படி, பதிவு செய்யப்பட்டுள்ளதா என்று எனக்கு நேரடியாக தெரியாது.

ஒம்/–த.பிரவின்குமார்
குற்றவியல் நடுவர்,
காங்கேயம்.